## நிதி அமைச்சு

## புதிய சுங்க சட்டத்தினை தயாரிப்பதற்காக முன்மொழிவுகளை / முன் வைப்புக்களை சமர்ப்பிக்குமாறு கோரி விடுக்கப்படும் அழைப்பு

2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின 604 ஆம் இலக்க முன்மொழிவிற்கு இணங்க நிதி அமைச்சினால் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் அறிவுரையின்படி புதிய சுங்க சட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சுங்க சட்டத்தினை தயாரிக்கும் நோக்கத்திற்காக வழிகாட்டி குழு, உத்தியோகப்பூர்வ நிலையிலான தொழிநுட்பக் குழு மற்றும் வரைவுக் குழு ஆகிய மூன்று குழுக்கள் மேற்படி முன்மொழிவினை செயல்படுத்துவதற்கு அச்செயல்பாட்டில் அக்கறை கொண்டுள்ளவர்களை உள்ளடக்கியவாறு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பின்னனியில் புதிய சுங்க சட்டத்தினை தயாரிப்பதற்கு எழுத்து மூலமான முன்மொழிவுகள் மற்றும் முன்வைப்புகளை பெற்றுத் தரும்படி அழைப்பு விடுப்பதற்கு நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய நலனை மையப்படுத்திய ஆக்கப்பூர்வமான முன்மொழிவுகள் / முன்வைப்புகள் புதிய சுங்க சட்டத்தினை தயாரிக்கும் நடவடிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக கவனத்தில் கொள்ளப்படும்.

அதன்படி, அரச நிறுவனங்கள், தொழில் சங்கங்கள், தொழில் தகைமைசார் அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் பிரத்தியேக / தனிப்பட்ட நபர்கள் ஆகியோரிடமிருந்து முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. முன்மொழிவுகள் மற்றும் முன் வைப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அ) முன்மொழிவுகள் / முன்வைப்புகளை சமர்ப்பிப்பவர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம். முன்மொழிவுகளை முன்வைப்பது தொழிற்சங்கம் / தொழில் தமைமை சார் அமைப்பு /அரச நிறுவனம் ஆக இருப்பின் அவ் வமைப்பின் பெயர்,முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ) முன்மொழிவின் பிரதான பகுதி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சகல முன்மொழிவுகள் மற்றும் முன்வைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு 2016.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்
நிதி அமைச்சு,
கொழும்பு 01

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 011 2484599 மூலம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் திரு. ஜீ.டீ.எஸ்.பீ. குமார அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

***தேசிய நலனுக்காக சகலரும் ஒன்றிணைவோம்!***

செயலாளர்
நிதி அமைச்சு
கொழும்பு 01